பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
22 08 2026 SATURDAY 6 45 AM
வணக்கம் - மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் வளர்ச்சியை விரைவாக எட்டும் நோக்கில், பல்வேறு துறைகளில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டுவதில், சுற்றுலாத்துறை முக்கிய பங்கு வகிக்கும் என்று மத்திய அமைச்சர் திரு. கஜேந்திரசிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார்.

3. வறட்சி நிலவரம் குறித்து, மாநிலம் முழுவதும் ஆய்வுகள் நடத்தப்பட்டு வருவதாக வருவாய்த்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் கூறியுள்ளார்.

4. மேகதாது அணை விவரகாரத்தில் த.வெ.க. அரசு, சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் உறுதியுடன் இருக்க வேண்டும் என்று விடுதலை சிறுத்தைகள் கட்சி வலியுறுத்தியுள்ளது.

5. உலக பேட்மிண்டன் சாம்பியன் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில், இந்தியாவின் Treesa Jolly - Gayatri Gopichand இணை இன்று சீன இணையை எதிர்கொள்கிறது.

>>>>>><<<<<

நாட்டின் வளர்ச்சியை விரைவாக எட்டும் நோக்கில், பல்வேறு துறைகளில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற பொருளாதார உச்சிமாநாட்டில் பேசிய அவர், அரசியல் ஸ்திரத்தன்மை காரணமாக விரைவான வளர்ச்சியும், சீர்திருத்த நடவடிக்கைகளும் சாத்தியமாகி வருவதாகவும் தெரிவித்தார்.

உலக அளவில் பொருளாதார சவால்கள் மற்றும் நெருக்கடிகள் நிலவி வரும் சூழ்நிலையில், உலகிலேயே மிக வேகமாக வளரும் பொருளாதார நாடாக இந்தியா திகழ்கிறது என்று அவர் குறிப்பிட்டார்.

சர்வதேச செலாவணி நிதியம் இதனை உறுதி செய்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

உற்பத்தியுடன் கூடிய ஊக்கத்தொகை திட்டம், புதிய வாய்ப்புகளை உருவாக்கி வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தியா எப்போதும் ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் இணைந்து பயணிக்கும் கொள்கையை கொண்டுள்ளது என்றும் பிரதமர் கூறினார்.

>>>>>><<<<<

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டுவதில், சுற்றுலாத்துறை முக்கிய பங்கு வகிக்கும் என்று மத்திய கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. கஜேந்திரசிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம், ஜெய்ப்பூரில் நேற்று நடைபெற்ற பிரிக்ஸ் நாடுகளின் சுற்றுலாத்துறை அமைச்சர்கள் மாநாட்டில் பேசிய அவர், சுற்றுலாத்துறையால், பெருநகரங்கள் தாண்டி, சிறுநகரங்கள் மற்றும் கிராமங்கள், தொலைதூரப் பகுதிகளும் பொருளாதார வளர்ச்சியடையும் என்று கூறினார்.

கடந்த பத்தாண்டுகளில் இந்தியாவிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை, 3 மடங்கு அதிகரித்துள்ளதாகவும், இதன் காரணமாக உணவு மற்றும் தங்கும் விடுதி உரிமையாளர்கள், டாக்சி ஓட்டுநர்கள், நெசவாளர்கள், கைவினைக் கலைஞர்கள் பயனடைந்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

சுற்றுலாத் துறையில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்த வேண்டும் என்றும், பொறுப்பான சுற்றுலா முறைகளை பேணி பாதுகாக்க வேண்டும் என்றும் திரு. கஜேந்திரசிங் ஷெகாவத் கேட்டுக் கொண்டார்.

>>>>>><<<<<

வறட்சி நிலவரம் குறித்து, மாநிலம் முழுவதும் ஆய்வுகள் நடத்தப்பட்டு வருவதாக வருவாய்த்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் கூறியுள்ளார்.

கோவை விமான நிலையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்தப் பணிகள் முடிந்த பின்னரே, நிவாரணம் குறித்த அறிவிப்பு வெளியிடப்படும் என்று தெரிவித்தார்.

மாநில அரசுக்கு நிதிச்சுமை இருந்தாலும் மக்களுக்கு செய்ய வேண்டிய கடமையை த.வெ.க. அரசு நிறைவேற்றும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

காவிரி நதிநீர் விவகாரத்தில், மாநிலத்தின் உரிமையை பாதுகாப்பதில் தமிழக அரசு உறுதியுடன் உள்ளதாகவும் திரு. கே.ஏ. செங்கோட்டையன் கூறினார்.

>>>>>><<<<<

அரசு அலுவலர்கள் நேர்மையாகவும், வெளிப்படைத்தன்மையுடனும் பணியாற்ற வேண்டும் என்று தமிழ்நாடு லோக் ஆயுக்தா அமைப்பின் உறுப்பினர் திரு. ராம்ராஜ் கேட்டுக் கொண்டுள்ளார்.

திருப்பூரில் நேற்று நடைபெற்ற நல்லாட்சி, ஊழல் தடுப்பு மற்றும் லோக்ஆயுக்தா குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பேசிய அவர், பொதுமக்களிடம் நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் அரசு ஊழியர்களின் பணி இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

நுகர்வோர் மன்றங்கள் செயல்படுவதைப் போன்று, ஒவ்வொரு ஊரிலும் பள்ளி மற்றும் கல்லூரிகளில் ஊழல் எதிர்ப்பு மன்றங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

ஊழலை தடுப்பதில் அரசு அலுவலர்களின் பணி முக்கியமானது என்றும் திரு. ராம்ராஜ் தெரிவித்தார்.

>>>>>><<<<<

தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்திற்கான மோதிரங்களை வழங்கும் நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

ஒப்பந்தப்புள்ளியில் 10 நிறுவனங்கள் பங்கேற்றதாகவும், குறைந்த விலைப்புள்ளி அளித்த இரண்டு நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளதாகவும் மாநில அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் 15ஆம் தேதி பேரறிஞர் அண்ணா பிறந்த நாளில் இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டாலும், ஜூன் மாதத்திலிருந்து பிறந்த குழந்தைகளும், தாய்மார்களும் கௌரவிக்கப்படுவார்கள் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

>>>>>><<<<<

மேகதாது மற்றும் நாடாளுமன்ற தொகுதி மறுசீரமைப்பு விவரகாரங்களில் த.வெ.க. அரசு, சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் உறுதியுடன் இருக்க வேண்டும் என்று விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திரு. தொல் திருமாவளவன் வலியுறுத்தியுள்ளார்.

திருவண்ணாமலையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர். சென்னையில் நடைபெற்ற தென்மாநில முதலமைச்சர்கள் மாநாட்டின் விளைவாக, மாநிலங்களிடையிலான பிரச்சினையில் ஒருமித்த கருத்து உருவானால் வரவேற்கத்தக்கது என்று கூறினார்.

மாநிலத்தின் உரிமைகளை விட்டுக்கொடுக்காத வகையில், த.வெ.க. அரசு செயல்பட வேண்டும் என்றும் திரு. தொல் திருமாவளவன் கேட்டுக் கொண்டார்.

>>>>>><<<<<

காசநோய் இல்லாத இந்தியாவை உருவாக்கும் வகையில், மத்திய அரசு நாடுமுழுவதும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக, தருமபுரி மாவட்டம், வத்தல்மலையை காசநோய் இல்லாத ஊராட்சியாக அறிவிக்கும் நோக்கில், அந்நோயை கண்டறியும் சிறப்பு முகாம் நடத்தப்பட்டதாக மாவட்ட காசநோய் தடுப்புப் பிரிவு துணை இயக்குநர் மருத்துவர் பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - பாலசுப்பிரமணியம் 55 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<

இருவரிச் செய்திகள்

அமெரிக்காவுடன் ஈரான் ஒப்பந்தம் செய்ய விரும்புவதாகவும், ஆனால் சரியான ஒப்பந்தத்தை எட்ட அந்நாடு தயாராக இல்லை என்றும் அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<

காஸாவில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்கும் சர்வதேச நிறுவனங்களை இஸ்ரேல் தடுத்து வருவதால், அந்நாட்டின் பிரதமர் திரு. பெஞ்சமின் நேத்தன்யாஹூவுக்கு எதிராக இன்டர்போல் கைது வாரண்ட் பிறப்பிக்க வேண்டும் என்று துருக்கி கோரிக்கை விடுத்துள்ளது.

>>>>>><<<<<

விமானப் போக்குவரத்து அமைச்சகத்திற்கான நாடாளுமன்ற ஆலோசனை குழுக் கூட்டம் மைசூரில், மத்திய அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு தலைமையில் நேற்று நடைபெற்றது.

>>>>>><<<<<

எல்லை தாண்டிய குற்றங்களை தடுப்பது தொடர்பாக, இந்திய-நேபாள கூட்டு பணிக்குழுக் கூட்டம், டேராடூனில் நேற்று நடைபெற்றது.

>>>>>><<<<<

தேனி மாவட்டம், உத்தமபாளையத்தில் வசிக்கும் மாற்றுத் திறனாளிகளுக்கான குறைதீர்நாள் கூட்டம் வரும் 25ஆம் தேதி நடைபெறும் என்று மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.

>>>>>><<<<<

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் அருகேயுள்ள திணையாம்பூண்டி ஊராட்சியில் நடைபெற்று வரும் வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சியர் திருமதி. சினேகா நேற்று ஆய்வு செய்தார்.

>>>>>><<<<<

மத்திய அரசின் மக்கள் நலத் திட்டங்கள் குறித்து விருதுநகரில் நடைபெற்ற விழிப்புணர்வு மற்றும் பயனாளிகள் பதிவு முகாமில் ஏராளமான தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

>>>>>><<<<<

*ESI* மற்றும் வருங்கால வைப்பு நிதி தொடர்பாக, மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் உள்ளிட்ட மாவட்டங்களில் வரும் 27ஆம் தேதி சிறப்பு குறைதீர் முகாம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<

திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் அருகே, விவசாய நிலத்தில் காட்டெருமை ஒன்று இறந்து கிடந்தது குறித்து வனத்துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

>>>>>><<<<<

கர்நாடக மாநிலத்திலிருந்து காரில் கடத்தி வரப்பட்ட 350 கிலோ போதைப்பொருட்களை திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் அருகே காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்.

>>>>>><<<<<

சென்னை தினம் இன்று கொண்டாடப்படுவதை முன்னிட்டு, நகரில் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

>>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

உலக பேட்மிண்டன் சாம்பியன் போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில், இந்தியாவின் *Treesa Jolly - Gayatri Gopichand* இணை இன்று சீன இணையை எதிர்கொள்கிறது.

புதுதில்லியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் அரையிறுதிக்கு இந்தியா முன்னேறியதன் மூலம், பதக்கத்தை உறுதி செய்துள்ளது.

>>>>>><<<<<

உலக கோப்பை ஹாக்கிப் போட்டியின் மகளிர் பிரிவில் நெதர்லாந்து 2-0 என்ற கோல்கணக்கில் இந்தியாவை வென்றது.

*>>>>>>END<<<<<*